1972 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது வினா 161-க்கு பதில்.

THIRU A. R. DAMODARAN : Is there any limit fixed for individual borrowings under these Rural Co-operative Societies?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிப்பட்டவர்கள் கடன் வாங்க இந்தத் திட்டத்தின்கீழ் ரூ. 15,000 வரை கொடுக்கப்படுகிறது.

Urban Co-operative House Construction Societies in Tamil Nadu.

*162 Q.—THIRU K. RAJARAM (on behalf of THIRU R. KRISHNASWAMY NAIDU) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) the number of Urban Co-operative House Construction Societies in Tamil Nadu;

(b) the number of loan applications received and the amount of loan applied for by them during the year 1971–72; and

(c) the number of loan applications for which loan was granted and the amount of loan so granted?

தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்

திரு. கே. ராஜாராம் (திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு சார்பில்) : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் எத்தனை ?

(இ) 1971–72-ஆம் ஆண்டில் இச்சங்கங்களிலிருந்து எத்தனை கடன் மனுக்கள் எவ்வளவு தொகை கடன் கோரி வந்தன ?

(உ) எத்தனை மனுக்களுக்கு, எவ்வளவு தொகை கடன் தரப் பட்டது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தமிழ்நாட்டில் தற்போது 506 நகர்ப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் உள்ளன.

(இ) 1971–72-ஆம் ஆண்டில் இச்சங்கங்களிலிருந்து 869 கடன் மனுக்கள் ரூ. 1,25,11,000 தொகை கடன் கோரி வந்தன.

(உ) இவற்றில் 554 கடன் மனுக்களுக்கு ரூ. 79,11,000 கடன் அனுமதி வழங்கப்பட்டது.

திரு. எல். பலராமன் : தலைவர் அவர்களே, கிராமப்புற வீடு கட்டும் சங்கமாக இருந்தாலும் அதிகமான அளவு கோரிக்கை மனுக்கள் வீடு கட்டக் கடன் வேண்டுமென்று வந்தது என்பதை அரசு உணருகிறதா ? அதிகமாக ஒதுக்கீடு செய்ய அரசு மேலும் நடவடிக்கை எடுக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கிராமப்புற வீடு கட்டும் சங்கங்களுக்கு அதிகமாக ஒதுக்கப்படவில்லை. நகர்ப்புற சங்கத்திற்கு கடன் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இது வரை, ஏற்கெனவே சொன்னது போல, 554 கடன் மனுக்களுக்கு ரூ. 79,11,000 கடன் அனுமதி வழங்கப்பட்டது.

"Pudumandapam" in Madurai Meenakshi Temple.

* 163 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to convert the "Pudumandapam" in Madurai Meenakshi temple into an Art Gallery ; and

(*b*) if so, the details thereof?

மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள "புது மண்டபம்"

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மீனாட்சி கோவிலில் உள்ள புது மண்டபத்தை ஒரு கலைக்கூடமாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.